**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் கொடுக்கல் வாங்கல் தொர்பான அறிக்கை - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன (திருத்தப்பட்ட) சட்டத்தின் 6 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் தாபனத்தின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்

தாபனத்தால் இறுதியாக தயாரித்த 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
| --- | --- |
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 6,458,394,856 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,592,315,521 |
| **மொத்த சொத்துக்கள்** | **11,050,710,377** |
| **உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | |
| உரிமை மூலதனம் | (2,941,269,573) |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 8,310,536,743 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 5,681,443,207 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **11,050,710,377** |
| மொத்த வருமானம் | 433,018,066 |
| மொத்த செலவினம் | 1,051,993,321 |
| **மிகை / (பற்றாக்குறை)** | **(618,975,255)** |

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நீண்ட காலம் முழுவதும் பெறவேண்டிய வாடகையாக காண்பிக்கப்பட்ட ரூபா 88,071,071 தொகையை அறவிடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிரக்கவில்லை. | நீண்ட காலம் முழுவதும் பெறவேண்டிய வாடகை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு விடயங்களைக் காண்பித்ததன் பின்னர் அது தொடர்பாக கண்டறிந்து அறவிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் உரிய கணக்குகள் இணக்கஞ் | பெறவேண்டிய வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டு பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நீண்ட காலம் முழுவதும் காணப்படுகின்ற நிலுவைப் பணம் தொடர்பான மூல ஆவணத்தை கண்டறிவதற்கு வசதியீனமாக இருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போதும் விடயங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் நீண்ட காலம் முழுவதும் காணப்படுகின்ற நிலுவை மீதியை பதிவழிப்பதற்கோ அல்லது நிலுவை வாடகையை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உள்ள நிறுவனத்திற்கு விரைவாக நிலுவைப் பணத்தை செலுத்துமாறு கடிதம் தற்போது அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரைவாக பணிப்பாளர் சபைக்கு விடயங்களைக் காண்பிக்குமாறும் உரிய குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெறவேண்டிய வியாபார மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 64,563,436 கூட்டுத்தொகையான மீதியில் எந்தவொரு தொகையையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மீதிகளை இணக்கஞ் செய்தல் மற்றும் அறவிடுவதற்காக பணிப்பாளர் சபைக்கு விடயங்களை அறிக்கையிட்டதன் பின்னர் பணிப்பாளர் சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் இந்த மீதிக்குரிய நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்து அறவிடுவதற்கு | அறவிட வேண்டிய மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | தொடர்புடைய தரப்பினரிடம் இருந்து அறவிட வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 24,202,985 தொகை தாபனத்தால் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை தயாரித்துள்ள முறை தொடர்பாக பதிலளிப்பதற்கு போதியளவான சான்றுகள் நிதிப் பிரிவிடம் காணப்படவில்லை. அதனால் இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்டுள்ள படி இழப்பீட்டிற்காக ஒதுக்கங்கள் மேற்கொண்டு நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய மீதியை அறவிடுதல் வேண்டும். |
| (ஈ) | கணக்கீட்டு முறைமையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு லங்கா சதொச கம்பனி மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையில் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய தொகை முறையே ரூபா 2,108,027,028 மற்றும் ரூபா 94,059,338 ஆக இருந்ததுடன், தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கும், நெல் சந்தைப்படுத்தும் சபைக்கும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 89,228,614 மற்றும் ரூபா 966,666,192 ஆக காணப்பட்டது. இந்த அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதுடன், அது தொடர்பாக உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து அந்த பணத்தை அறவிடுவதற்கும் மற்றும் | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் உள்நாட்டு அரிசி விற்பனைக்காக பெறவேண்டிய பணத்தை செலுத்துவதற்காக லங்கா சதொச இனால் கொடுப்பனவுத் திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டிருந்தது. லங்கா சதொச இனால் 2022 செப்டெம்பர் 01 ஆந் திகதி முதல் மதாந்தம் ரூபா 25,000,000.00 தொகை 06 வருட காலத்தில் சதொசவிற்கு செலுத்துவதற்கு இணங்கியிருந்தனர். நெல் சந்தைப்படுத்தும் சபை மற்றும் லங்கா சதொச நிறுவனங்களின் மீதியை இணக்கஞ் செய்வதற்கும், அறவிடுவதற்கும் பணிப்பாளர் சபையினால் ஊழியர்கள் நியமிக்கப்படடிருந்ததுடன் அவர்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் | உரிய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதற்கும் தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபனத்தால் உரிய மீதியை அறவிடுவதற்கும் இணக்கஞ் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நானாவித கடன்பட்டோர்களிடம் இருந்து தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 36,751,643 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளை அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் கணக்கீட்டு நியம இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொண்டு நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. சகல கடன்பட்டோர் மீதிகளையும் அறவிடுவதற்காக பணப்பாளர் சபை ஆலோசனையின் படி நிறுவனத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களால் இந்த மீதிகளை இணக்கம் செய்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் தாபனத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) கூட்டுறவு | 2021 ஆம் போதும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையறை விதிக்கப்பட்டமை போன்ற விடயங்களினால் நிறுவனத்தின் நடவடிக்கைகளை முறையான பிரகாரம் | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சங்கங்களின் தேவையான பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் | பேணிச் செல்வதற்கு முடியாதிருந்தது. 2021 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று நோய் காணப்பட்டதன் காரணமாக சதோச நிறுவனத்தின் முக்கியமான இலக்குகளுக்கு புறம்பாக அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துதல் தொடர்பில் சதோச நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | |
| (ii) சகல முறையிலும் பொருட்கள் தொடர்பாக ஏற்றுமதியாளருக்கு, இறக்குமதியாளருக்கு, மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளுக்காக நடவடிக்கை எடுத்தல். | | |
| (iii) உரிய அமைச்சர் மற்றும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் இணக்கப்படாட்டின் அடிப்படையில் விவசாய நடவடிக்கைகள் அல்லது வங்கி மற்றும் கடல் சார் நடவடிக்கைகளை உள்ளடக்கிய தனிப்பட்ட ஏனைய வர்த்தக அல்லது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | | |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் தாபனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதிசார் செயலாற்றலை கட்டியெழுப்புதல் மற்றும் நுகர்வோர் திருப்தியை அதிகரிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) பயறு, கௌப்பி, மிளகு மற்றும் கருவாடு என்பவற்றை தேசிய ரீதியில் கொள்வனவு செய்து | கொவிட் தொற்று நோய் பரவியதன் காரணமாக இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக தொடர்ச்சியாக | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகிர்ந்தளிப்பதன் மூலம் மாதாந்த இலாப சதவீதத்தை அதிகரித்தல். | அமுல்படுத்துதவற்கு முடியாதிருந்தது. மேலும் வெளிநாட்டு ஒதுக்கங்கள் இழக்கப்பட்டதன் அடிப்படையில் இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை மற்றும் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் இரசாயன உரங்கள் தடை செய்யப்பட்டு சேதனப்பசளை பயன்பாட்டை மேம்படுத்தியதனால் விளைச்சல் குறைவடைந்ததன் அடிப்படையில் உள்நாட்டு விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தது. | |
| (ii) | சிவப்பு பருப்பு, நெத்தலி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், கடலை மற்றும் உலர்ந்த மிளகாய் போன்ற அத்தியவசிய பொருட்களை இறக்குமதி செய்து பகிர்ந்தளிப்பதன் மூலம் இலாப சதவீதத்தை அதிகரித்தல். | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிவப்பு பருப்பு, வெள்ளை சீனி, நெத்தலி, வெள்ளைபூடு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், கடலை மற்றும் பயறு என்பவற்றை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. | -மேற்படி- |
| (iii) | மாதாந்தம் 60,000 வெற்றிலை பொதிகளை ஏற்றுமதி செய்து இரண்டாவது காலாண்டு முதல் வருமானத்தை அதிகரித்தல். | இது தொடர்பாக எழுந்திருந்த பிரச்சினைகள் சிலவற்றினால் ஏற்றுமதி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருந்தது. | திட்டமிடப்படுகின்ற போது காணப்படுகின்ற இடையூறுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

- நாட்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் காரணமாக கணிசமான காலவீச்சில் நாடு மூடப்பட்டமையால் முதன்மையாக அமுல்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமை.

- வாங்குபவர்களுக்கு வெற்றிலை இருப்பினைப் பெற்றதன் பின்னர் பணத்தை செலுத்துவதற்கு வாங்குபவர்கள் அறிந்திருந்ததன் அடிப்படையில் ஏதாவது ஒரு வழியில் வெற்றிலை இருப்பினை பெற்று பணம் செலுத்தாதிருப்பார்களாயின் பணத்தை அறவிடுவதற்கு உள்நாட்டு முகவர் நிறுவனம் அல்லது முகவர் காணப்படாமை.

- வெற்றிலை உரிய நியமத்திற்கு காணப்படாதிருந்ததாக கூறி ஏதோ ஒரு வழியில் இருப்புக்கள் நிராகரிக்கப்படுமாயின் மீண்டும் இருப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் அல்லது இருப்பு தொலைந்தமையினால் அதிக நட்டம் அல்லது செலவினங்கள் ஏற்பட்டமை.

- விளைச்சல்களை கவனத்தில் கொண்டு மிகவும் குறுகிய காலத்தில் ஏற்றுமதி செய்யவேண்டியிருந்த மையால் கட்டுநாயக விமான நிலைய சுற்றாடலில் களஞ்சிய மற்றும் அலுவலக வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமை மற்றும் அதற்காக அதிக செலவினங்களை செய்ய

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டியிருந்தமை. | |
| (iv) | 05 மெற்றிக்டொன் அளவான 05 லொறி வண்டிகள் ஒதுக்கப்பட்டு இயற்கை மரக்கரி நடமாடும் விற்கனை கடைகளை ஸ்தாபித்தல். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அதற்காக வர்த்தக அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமையினால் செயற்திட்டத்தை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |
| (v) | மாதாந்த வாடகை சதவீதத்தை அதிகரிப்பதற்காக காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு வாடகையை அதிகரித்தல். | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் பரவிச்சென்ற கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விதிக்கப்பட்டமை போன்ற விடயங்களினால் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு அரசாங்கத்தின் மதிப்பீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய இடங்களுக்கு செல்வதற்கு கஷ்டம் ஏற்பட்டமையின் அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. அவ்வாறே அவ்வாண்டில் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமையினால் வாடகையின் அடிப்படையில் ஆதனங்கள்/ சூழல் / களஞ்சிய செயற்பாடுகளுக்காக வியாபார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமையினால் வாடகையினை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் | திட்டமிடப்பட்ட பணிகளை இயலுமான வரையிலேனும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் காணப்பட்ட வாடகை தொகையில் 10 சதவீத தொகை சேர்க்கப்பட்டு வாடகை அதிகரித்து பெறப்பட்டிருந்ததுடன், தற்போது சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அரசாங்கத்தின் மதிப்பீட்டு தொகையில் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | |
| (vi) | மோட்டார் வாகன தரிப்பிட வசதிகளை அபிவிருத்தி செய்து மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதன் மூலம் வருமான சதவீதத்தை அதிகரித்து கொள்ளல். | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் பரவியிருந்த கொவிட் தெற்று நோயின் காரணமாக தனிமைப்படுத்தல் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விதிக்கப்பட்டமை போன்ற விடயங்களினால் கொழும்பிற்கு மோட்டார் வாகனங்கள் வருகை தரல் வரையறுக்கப்பட்டதன் அடிப்படையில் வருமான சதவீதத்தை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டில் வருமான சதவீதத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அரச நிறுவனங்களுக்காக காப்புறுதி நிறுவனத்திற்கு அவர்களின் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்கு மோட்டார் வாகன தரிப்பிட வசதிகளை வழங்குவதன் மூலம் வருமான சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (vii) | ஏ.ரீ.எம் இயந்திரம் மற்றும் டிஜிட்டல் விளம்பர | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் பரவியிருந்த கொவிட் தொற்று நோய் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்தலை ஸ்தாபிப்பதன் மூலம் வாடகை வருமானத்தை உயர்த்துதல். | நிலைமை 2021 ஆம் ஆண்டின் போதும் தொடர்ச்சியாக காணப்பட்டதன் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விநிக்கப்பட்டமை போன்ற விடயங்களினால் வியாபார நிலையங்கள் மூடப்பட்டமை, நட்டத்தை பெற்றமை போன்ற விடயங்களினால் விளம்பர அறிவித்தல்களுக்கான கேள்வியொன்று ஏற்படாதிருந்தமை மற்றும் ஏ.ரீ.எம் இயந்திரத்திற்காகவும் வங்கியின் மூலம் சிறந்த பதில் காண்பிக்கப்படாதமையின் அடிப்படையில் அந்த ஆண்டிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (viii) | அரிசி ஆலைகளின் இயலளவை மணித்தியாலத்திற்கு 02 மெற்றிக் டொன் முதல் 2.5 மெற்றிக் டொன் வரை அதிகரிப்பதன் மூலம் அரிசி உற்பத்தியை அதிகரித்தல். | இந்த நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக அடிப்படையாக 2020.02.10 ஆம் திகதிய 2020/1822/08 இன் கீழ் பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் அவதானிப்பு மற்றும் பரிந்துரையின் கீழ் அரிசி ஆலைகளின் இயலளவு மற்றும் தரத்தன்மையை அதிகரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, எனினும் அரிசி ஆலைகளை பழுதுபார்த்து மீண்டும் ஒரு தடவை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டில் ரூபா 3.2 மில்லியன் இலாபம் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் தேவையான நெல் இருப்பு சதோச நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படாதிருந்ததுடன், அரசாங்கத்தின் பங்குபற்றலின் அடிப்படையில் நெல் கொள்வனவு செய்தல் நேரடியாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமையால் சதொசவிற்கு நெல் கிடைக்காத நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. அதனால் அந்த ஆண்டில் நெல் குற்றுதல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | |
| (ix) | செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் கூறு விலைகள் கோரி லொறி வண்டிகளை பெற்றுக்கொள்ளல். | கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே வியாபார சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையால் இலாப சதவீதம் பெறப்படாமை மற்றும் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் செலவினங்களை குறைப்பதன் மூலம் அபிவிருத்தி மற்றும் விளம்பர செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையால் லொறி வண்டிகளை பெற்றுக் கொள்ளல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் மீண்டும் இது தொடர்பான விருப்பங்களை காண்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களில் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்ட அளவு 161,136 சதுர அடியாக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாடகையின் பிரகாரம் இந்த கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டமையால் வருடாந்தம் ரூபா 52,585,440 வருமானம் தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்காக நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையினால் தனிமைப்படுத்தல் சட்டம், நடமாடும் வரையறை, அலுவலங்களுக்கு வருகைதரல் வரையறுக்கப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அது தொடர்பாக செயற்படுவதற்கு முடியாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் அந்த சொத்துக்களில் வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக கேள்வி கோருவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறு விலைகளை விட குறைவான சதுரஅடியின் விலை தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக வாடகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களில் மீளாய்வாண்டின் தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 107,040,868 ஆகும். | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகளுக்கு குறைவாக வழங்கப்பட்ட சில களஞ்சியங்கள்/ ஆதனங்களுக்குரிய வாடகை வாடிக்கையாளரிகளினால் அந்த களஞ்சியங்களை பழுதுபார்ப்பதற்காக தமது நிதியை ஈடுபடுத்தியிருந்ததுடன், அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டும் மற்றும் சில ஆதனங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகளின் படி வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவ்வாறே சில களஞ்சியங்கள் / ஆதனங்கள் சதொச நிறுவனத்தின் சகோதரக் கம்பனியான லங்கா சதொச நிறுவனத்திற்கும் மற்றும் சதொச நிறுவனத்தின் துணை கம்பனிகளுக்காக வாடகை அடிப்படையிலும் வழங்கப்பட்டிருந்தது. | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது தாபனத்திற்கு சொந்தமான 13 களஞ்சியங்களை நவீனமயப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், நவீனமயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தாபனத்தால் ரூபா 82,525,632 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த சகல நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளும் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 09 களஞ்சியங்கள் மாத்திரம் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | முன்னைய அமைச்சின் கீழ் காணப்பட்ட பாதீட்டு நிதி ஏற்பாட்டு தொகையை புதிய அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்காக நீண்ட காலம் எடுத்திருந்தமை, இதன் காரணமாக ஒப்பந்த காரரால் சமாப்பிக்கப்பட்ட வேலை பூர்த்தி பட்டியல்களுக்காக குறித்துரைத்த பிரகாரம் பணம் செலுத்துதல் நீண்ட காலம் தாமதமடைந்தமை. அந்த நிலைமையில் அளவிடைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட விலை மட்டங்களும் பொருளாதார ரீதியில் அதிகரித்தமை, இந்த செயற்திட்டத்திற்கு பொறுப்பாக செயலாற்றிய கம்பனியின் பொறியியலாளர் கைது செய்யப்பட்டமை, அந்த கம்பனிக்காக பணிப்பாளர் சபையினை நியமித்தல் தாமதமடைந்தமை மற்றும் அதன் முன்னாள் பிரதான நிறைவேற்று மற்றும் பிரதான பொறியியலாளர் நீக்கப்பட்டமை, நாட்டில் விரைவாக பரவியிருந்த | திட்டமிடப்பட்ட பணிகளை குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொவிட் - 19 வைரஸ் தொற்று நோய் போன்ற காரணங்களினால் இந்த செயற்திட்டத்தின் வேலை மேற்பார்வைகளும் பிரச்சினைக்குரியதான நிலைமைக்கு உட்பட்டிருந்தது.<br><br>மேற்கூறப்பட்ட விடயங்களை நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாதிருந்த தாக்கத்தின் கீழாக இருந்த போதிலும், இது வரையில் இந்த 13 களஞ்சியங்களில் 09 களஞ்சியங்களின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றோம். | |
| (ஆ) | தாபனத்தால் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கப்பட்ட பொருள் இருப்பு போக்குவரத்து சேவைக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வருமானத்தில் போக்குவரத்தின் போது வழியில் ஏற்பட்ட இழப்புக்களின் காரணமாக பட்டியல் பெறுமதியில் ரூபா 18,819,050 வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், அது இந்த அறிக்கை திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | லங்கா சதொச பொருள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட லொறி வண்டிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்காக பொறுப்பு வாய்ந்த ஊழியர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வழியில் ஏற்பட்ட இழப்புக்களை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடல் வேண்டும். |
| (இ) | தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு ரூபா 436,164,234 பெறுமதியான அரிசி இருப்புக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட ரூபா 118,011,334 | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பை பெற்று ரூபா 118,011,334 நிதி மோசடி தொடர்பாக, மதிப்பிழந்த காசோலைகளை வழங்குதல் மற்றும் போலியாக வங்கி பிணைகளை வழங்கிமை தொடர்பாக | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடுவதற்கு உள்ள இயலுமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை தீர்த்து வைப்பதற்காக வழங்கப்பட்ட சகல காசோலைகளும் மதிப்பிழந்திருந்தது. தாபனத்தால் கடன் அடிப்படையில் அரிசி வழங்கும் போது ரூபா 100,000,000 ஆன 02 வங்கி பிணைகள் பெறப்பட்டிருந்ததுடன், அந்த பிணைகள் உள்ளபடியான ஆவணமாக இருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் கம்பனியால் தொடர்ச்சியாக கடன் செலுத்தப்படாதிருந்த போதிலும், கம்பனிக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் , இந்த வங்கி பிணைகள் பிழையாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பணத்தை செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமையால் தாபனத்தால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றும் விசாரணையில் காணப்பட்டது. | குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு அது தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழங்கு தொடரப்பட்டிருந்ததுடன், கொழும்பு வணிக நீதிமன்றத்தில் சிவில் வழக்கும் இது தொடர்பாக விசாரணையில் காணப்படுகின்றது. | |
| (ஈ) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக வாங்குபவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்ட ரீதியான நடவடிக்கைகளின் பிரகாரம் கிடைக்க வேண்டிய தொகை ரூபா 5,574,811 ஆகும். கடன் அடிப்படையில் அரிசி பெறப்பட்டு வாங்குபவர்ளினால் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டதன் காரணமாக இது தொடர்பாக குற்றப்புலனாய்வு | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனைக்காக டப்ளியூ. ஆர் விஜித என்பவருக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது கூற்றொன்று பெறப்பட்டுள்ளது. மேலும் டப்ளியூ. ஆர் விஜித என்பவருக்குரிய அரிசி விற்பனை மற்றும் பணம் | கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கும் போது அறவிடுவதற்குள்ள இயலுமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திற்கு தாபனத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | பெறல் தொடர்பாக முழுமையான கணக்காய்வு மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கையொன்று வழங்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்திருந்ததுடன், அதன் பிரகாரம் சுயாதீன கணக்காய்வை மேற்கொண்டு உரிய கணக்காய்வு அறிக்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது தாபனத்தின் சுத்திகரிப்பு சேவைகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 4,254,625 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் கொவிட் 19 பரவலின் காரணமாக அரசாங்கத்தால் தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விதிக்கப்பட்டமை போன்றவற்றின் காரணமாகவும், அரசாங்க அலுவலகங்களில் அத்தியவசிய சேவைகள் மாத்திரம் கோரப்பட்டு நடாத்திச் செல்லப்பட்டதன் அடிப்படையிலும் கேள்வி கோருவதற்கு முடியாதிருந்தது. 2020 ஆம் ஆண்டின் விலையில் 2021 ஆம் ஆண்டின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படி தெரிவு செய்யப்பட்ட சுத்திகரிப்பு நிறுவனமே இதற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் நிபந்தனைகளின் கீழ் சேவை பெற்றப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்கு தேவையான வழிகாட்டி/ ஆலோசனைகளுடன் ஆவணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சேவை ஒப்பந்தங்கள் தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தாபனத்திற்கு போக்குவரத்து சேவை வருமானத்தில் 98 சதவீதம் லங்கா சதொச கம்பனிக்கு வழங்கப்படுகின்ற போக்குவரத்து சேவைகளுக்காக கிடைத்திருந்த போதிலும், போக்குவரத்திற்காக லங்கா சதொச கம்பனியுடன் எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | லங்கா சதொச நிறுனவம் மற்றும் உடன்படிக்கை தொடர்பாக பல தடவைகள் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதும் ஒரு பிரயாணத்திற்காக செலுத்த வேண்டிய / அறவிட வேண்டிய கிலோ மீற்றர் அளவு தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்படாதிருந்தது. எனினும் பட்டியல் பெறுமதிக்காக லங்கா சதொச நிறுவனத்தால் கிலோ மீற்றர் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக கலந்துரையாடப்படுகின்றது. | சேவை ஒப்பந்தங்கள் தொடர்பாக எழுத்து மூல உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | தாபனத்தால் மீளாய்வாண்டிற்காக போக்குவரத்து சேவை வழங்கும் போது 2017 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட விலை வீதத்தின் அடிப்படையில் போக்குவரத்து கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன், லொறி வண்டிகளுக்காக அறவிடப்படுகின்ற வீதத்தில் 2017 ஆம் ஆண்டின் பின்னர் 05 வருடங்கள் வரை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை எரிபொருள் விலையில் கணிசமான அளவில் மாற்றங்கள் ஏற்படாதிருந்ததுடன், அந்த கால பகுதியில் சந்தைகளில் காணப்பட்ட விலைகளின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, எனினும், கூறுவிலைகளை அதிகரிப்பதற்காக கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும், லங்கா சதொச நிறுவனம் தனது கிரயத்தை அதிகரிப்பதற்கு முடியாதிருந்ததாக குறிப்பிட்டு அதன் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆம் ஆண்டின் போது லொறி | அறவிடப்படுகின்ற வீதத்தை கால ரீதியில் திருத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வண்டிகளுக்காக அறவிடப்படுகின்ற வீதம் திருத்தப்பட்டுள்ளது. | |

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தாபனத்திற்கு சொந்தமாக 97 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 11 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டு வருடம் முழுவதும் விளைவற்று காணப்பட்டதுடன், அது தொடர்பாக 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் 97 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், அதில் 11 வாகனங்கள் விளைவற்று காணப்பட்டதுடன், அந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக கேள்வி கோரப்பட்ட போதும் அது தொடர்பாக ஏற்பட்ட நடைமுறை ரீதியான மற்றும் சட்ட ரீதியான பிரச்சினைகளின் அடிப்படையில் அந்த கேள்வி இரத்துச் செய்யப்பட்டதுடன், மீண்டும் அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு போக்குவரத்து முகாமையாளரால் முன்மொழியப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் அந்த வாகனங்களை மீண்டும் பழுதுபார்த்து பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பான அறிக்கையொன்று பணிப்பாளர் சபையினால் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் இது தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) தாபனத்திற்கு சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் தொகுதியில் 18 | இந்த இரண்டு தொகுதிகளுக்காகவும் நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து நெல் | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக |

வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் குறைவாக பயன்படுத்தப்படுவதுடன், அரிசி தொகுதி இரண்டும் மணித்தியாலத்திற்கு 2000 கிலோ கிராம் அரிசி வீதம் தயாரிக்கும் இயலுமையுடன் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது உரிய அரிசி தொகுதி இரண்டும் எவ்வித அரிசி உற்பத்தியையும் மேற்கொள்ளாமல் விளைவற்று காணப்பட்டதுடன், அரிசி தயாரிக்கும் தொகுதி இரண்டும் மீளாய்வாண்டின் போது 03 முதல் 20 வரையான ஊழியர் எண்ணிக்கையொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. சம்பளம், மேலதிக நேரம் மற்றும் படிகளை உள்ளடக்கி ஊழியர் கிரயம் ரூபா 13,902,442 ஆக காணப்பட்டது.

இருப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் கையில் காசுக்கு மாத்திரம் நெல் இருப்பு விநியோகித்தலை மேற்கொள்கின்றனர். அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமாக காணப்பட்ட நெல் இருப்பு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அந்த இருப்புக்கள் சதொசவிற்கும், தனியார் துறைக்கும் ஒரே தடவையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் போது சதொசவிற்கு அந்த காலத்தில் பெற முடியுமாக இருந்த வரையறுக்கப்பட்ட நெல் இருப்பு அளவு மாத்திரம் குத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் சதொச நேரடியாக நெல் இருப்பை கொள்வனவு செய்யாதிருந்ததுடன், விவசாயிகளிடம் இருந்து பிரதானமாக ஈரலிப்புடன் நெல் உற்பத்தியாகின்றமையினால் மற்றும் அந்த நெல் இருப்புக்களை கொள்வனவு செய்து குத்துவதற்காக சில மாதங்கள் களஞ்சியத்தில் வைப்பதற்கும், தேவையான நெல் உலர்த்தும் வசதிகள் சதொசவிற்கு சொந்தமாக இல்லாதிருந்ததையும் அறியத்தருகின்றோம். மேலும் இரண்டு தொகுதிகளுக்காகவும் பாதுகாப்பு பிரிவுகளை உள்ளடக்கிய சதொச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்கள் தொகுதி இரண்டில் இருந்தும் நீக்கப்பட்டு சதொச

செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | வேறொரு நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களுக்காக சம்பளம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் தொகுதியில் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அரிசி தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக பயிற்சி ஊழியர்களாக இருந்தமையால் அவர்கள் ஏனைய பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தமையும், அந்த களஞ்சியம் விளைவற்று காணப்பட்டமையால் அந்த களஞ்சியத்தின் பராமரிப்பு, அரிசி தயாரிக்கும் இயந்திரங்கள் சுத்திகரித்தல், நிலத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக இந்த ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | |
| (இ) | தாபனத்திற்கு சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் தொகுதிக்கு இணைந்ததாக 04 களஞ்சியங்களும் மீளாய்வாண்டு முழுவதும் விளைவற்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு சொந்தமாக நெல் இருப்புக்கள் காணப்படாமையின் காரணமாக சதொச நிறுவனம் தொடர்ச்சியாக நெல் குத்தும் செயற்பாடுகளை பேணிச் செல்வற்கு முடியாதிருந்தது. அதன் மூலம் தாபனத்திற்கு சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் தொகுதி விளைவற்று காணப்பட்டதுடன், ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி தயாரிக்கும் தொகுதிக்கு இணைந்ததாக களஞ்சியங்களில் நெல் | தாபனத்தின் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

ஆலைகள் சார்ந்த உற்பத்தி மற்றும் அரிசி களஞ்சியப்படுத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த களஞ்சியங்கள் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்துதல் அல்லது ஏனைய தரப்பினருக்கா என அந்த வருடத்தில் தீர்மானிக்கப்படவில்லை. மேலும் கொவிட் தொற்று நோயின் காரணமாக தேவையான சந்தர்ப்பங்களின் போது அத்தியவசிய உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக அந்த களஞ்சியம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.